1973 டிசம்பர் 1] *[பேரவைத் தலைவர்]*

இதுவே நாடாளுமன்றத்திலும் நமது சட்ட மன்றங்களிலும் பின்பற்றப்படும் மரபாகும். நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலும் இந்த முறையைத் தவறாது பின்பற்ற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, உறுப்பினர்கள் இதனைக் கருத்திற்கொண்டு உரை நிகழ்த்துமாறு வேண்டுகிறேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆவணங்கள் படிப்பது குறித்து பேரவைத் தலைவர் வகுத்த முறையைப் பின்பற்றுவது பற்றி.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை உங்கள் அனுமதியின் பேரில் எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் தீர்ப்பு கொடுக்கும் பொழுது யாராவது ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினருக்கு எழுதியிருந்தால், அதை எழுதிய உறுப்பினருக்குக் காட்ட வேண்டுமென்றும், அந்த உறுப்பினரின் அனுமதி பெற்றுத்தான் படிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தீர்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கடிதத்தைப் படிக்கும்பொழுது, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் எழுதியதாக ஒரு கடிதத்தைப் படித்தார்.
alleged to have been written by Thiru P. Soundarapandian என்று காட்டினார். இங்கே படித்தார். அந்த நேரத்தில், உங்களுடைய தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறோம் என்று சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். திரு. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய அனுமதியில்லாமல் படித்தார்கள். ஆகவே, தாங்கள் இப்பொழுது கூறியிருக்கும் முறையில் அமைச்சர்களுக்கு ஒரு ரூலிங், மற்ற உறுப்பினர்களுக்கு இன்னொரு ரூலிங் என்று இருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. நேற்று அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இது. இந்த மன்றத்தில் இருக்கும் 234 உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். அமைச்சர்களானாலும், கட்சித் தலைவர்களானாலும், எந்தக் கட்சி உறுப்பினர்களானாலும் அது எல்லோருக்கும் உரியதுதான். அடுத்து ....

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்பொழுது யாரும் நிற்கக்கூடாது என்ற அந்த மரபைக் கூட பின்பற்றவில்லையென்றால் எப்படி?

[முற்பகல் 10-30]

(இ) பேரவை நடவடிக்கைகளின் ஒரு பகுதி முழுமையையும் நீக்குவது குறித்துப் பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை நடவடிக்கைகளின் பகுதிகளை நீக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். அதுபற்றி நான் முடிவு கூறியபோது, இவ்வாறு நீக்கப்படுவது இதற்கு முன்னரும் நடை பெற்றிருக்கிறது. அதற்கான சான்றுகளை இன்று தருவதாகக் கூறினேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் பெருமளவில் நீக்கப்படுவது நம் நாட்டுப் பல்வேறு சட்டமன்றங்களிலும் நிகழ்ந்த காரணத்தால் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டிலே கூட இது குறித்துப் பெரிய விவாதமே நடைபெற்றுள்ளது.

1958 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் ஆற்றிய உரையில் இருபது நிமிடம் பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த டாக்டர் திரு. கிருஷ்ணாராவ் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

1964 ஆம் ஆண்டில் ஓர் உறுப்பினரின் உரையில் ஒரு பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

6-3-1968 ஆம் நாள் நிகழ்ச்சிகளில் இருபது நிமிட விவாதமும், 20-8-1968 ஆம் நிகழ்ச்சிகளில் பதினைந்து நிமிட விவாதமும் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து அறவே நீக்கப்பட்டுள்ளன.

டில்லி மக்களவை, மாநிலங்கள் அவைகளிலும் கூட இவ்வாறு நடவடிக்கைப் பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன ஓர் உறுப்பினர் ஆற்றிய உரை முழுவதுமாக நீக்கப்பட்ட நிகழ்ச்சியும் ஆங்கு நிகழ்ந்துள்ளது.